[1975 மார்ச் 12

அமைக்கப்பட்ட நிலையான சோழர் கலைப்பொருட்காட்சியில் அச்சிலை வைக்கப்பட்டுள்ளது. அந்த ஒரு சிலைதான் அந்த இடத்தில் கிடைக்கப்பட்டது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தஞ்சை பெரிய கோயில் இராச இராச சோழ மன்னன் புகழுக்கு மகுடம் வைத்த தாகும் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கோயிலைச் சுற்றி பல அற்புதங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அதை மேலும் அகழ்வாராய்ச்சி செய்து அதில் இருக்கின்ற பழைமை யான பொருள்களை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையும் மாநில தொல் பொருள் ஆராய்ச்சித் துறையும் அதுபற்றி அகழ்வாராய்ச்சி செய்து வருகிறார்கள். அவற்றில் இப்படிப்பட்ட கோவில் சம்பந்தமான பொருள்கள்தான் கிடைக்கப் பெறுகின்றன. அவை யெல்லாம் அந்தக் கோயில் மண்டபத்திலேயே அமைக்கப் பட்டிருக்கிற சோழர் கலைப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருக் கின்றன.

தஞ்சை கலைக்கூடம்

* 282 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை கலைக் கூடத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, தஞ்சை கோவிலுக்குள்ளேயே ஓவியக்கூடம் ஒரு சிறப்புக்குரியதாக இருக்கிறது. அந்த ஓவியக்கூடம் மத்திய அரசால் சரிவர பாதுகாக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதே, அது உண்மையா?

1975 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தப் பழைமையான ஓவியங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பை மைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோவில் கட்டடங்கள், கொத்தளங்கள், இவற்றுக்குள்ளே இருக்கின்ற கலைச் சிறப்புகள் ஆகிய அத்தனையும் மைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இருந்து வருகிறது. அவர்கள் பாதுகாத்து வருவதாகத்தான் தகவல் நமக்குக் கிடைத்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தக் கோவிலில் இருக்கும் ஓவியக் கண்காட்சியில் ஏற்கெனவே சோழ மன்னர்கள் காலத்தில் எழுதப்பட்ட ஓவியங்கள் இருக்கின்றன. அதற்குமேல் நாயக்கர் காலத்திய ஓவியங்களெல்லாம் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. புராதனமான அந்த ஓவியங்களைத் தனியாகப் பிரித்து வைக்க நம்முடைய அரசு வகை செய்திருக்கிறதா? அல்லது மைய அரசு செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்தக் கோயிலின் கருவறையின் நான்கு சுவர்களிலும் சோழர் காலத்தில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கோவில் கட்டப்படும்போது எழுதப்பட்ட பழைய ஓவியங்கள் இருந்தன. அதற்குப் பிறகு சாந்து பூசப்பட்டு, நாயக்கர் காலத்தில் வேறு ஓவியங்கள் வரையப்பட்டன. சில பல ஆண்டுகளுக்கு முன்னால், மேலேயிருக்கும் பட்டை கீழே விழுந்து, உள்ளே சிறந்த ஓவியங்கள் இருப்பது தெரிந்தது. மேலே இருக்கும் பட்டைகள் முழுவதும் எடுக்கப்பட்டு, சோழர் காலத்து ஓவியங்கள் இப்பொழுது காக்கப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். வடிவேல்: பழைய மன்னர் காலத்தைச் சேர்ந்த சித்த வைத்திய ஏட்டுச் சுவடிகள் மிகச் சிறப்பாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றனவே. அந்தப் பழைய சுவடிகள் இருக்கின்றனவா என்று அகழ்வாராய்வில் கண்டுபிடிக்கப்பட்டனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பல்வேறு சுவடிகளை வைத்திருக்கிறார்கள். அங்கு ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. சித்த வைத்திய முறையில்

பல்வேறு நூல்களை சரஸ்வதி மகால் நூலகத்தினர் வெளியிட்டு வருகிறார்கள். மேலும் தொடர்ந்து அந்தத் துறையிலே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

Periods for language teaching

* 283 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the number of periods for language teaching in the High Schools in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(அ) இல்லை.*

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

* 284 **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ் நாட்டில் 1970 முதல் 1974-ம் ஆண்டு வரை எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துவங்கப்பட்டன?

(இ) இவற்றிற்காக மொத்தம் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது?

(உ) இதில் மத்திய அரசு உதவி ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *(அ) 1970-ம் ஆண்டு முதல் 1974-ம் ஆண்டு வரை 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் துவங்கப்பட்டன.*

(இ) 1970-ம் ஆண்டு எப்ரல் 1-ம் தேதி முதல் 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முடிய இந்த 37 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ரூ. 55,52,506.44 பைசா செலவழிக்கப்பட்டது.

(உ) இல்லை.